செய்தி வெளியீடு எண்: 188 நாள்: 06.03.2020

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (6.3.2020) தலைமைச் செயலகத்தில், சட்டத்துறை சார்பில் தேனி மாவட்டம், தேனி வட்டம், தப்புக்குண்டு கிராமத்தில், 89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள தேனி அரசு சட்டக் கல்லூரிக் கட்டடம் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்களுக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 10.7.2019 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ஆண்டுதோறும் சட்டக் கல்வி பயில்வதற்காக விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு குறைந்த செலவில் சட்டக் கல்வியினை வழங்கிட புதிதாக 3 அரசு சட்டக் கல்லூரிகள் துவங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மூன்று இடங்களில் 2019–2020ஆம் கல்வியாண்டு முதல் 3 ஆண்டு சட்டப் படிப்பு மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்பில் முதலாம் ஆண்டில் 80 மாணவர்களுடன், தலா ஒரு அரசு சட்டக் கல்லூரி துவங்கிடவும், சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய இடங்களில் புதிதாக அரசு சட்டக் கல்லூரிகள் துவக்குவதற்கான ஆரம்ப கட்டப்பணிகளை மேற்கொள்வதற்காக தனி அலுவலர்களை (Special Officers) நியமித்தும் தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டது.

அதன்படி, தேனி மாவட்டம், திண்டுக்கல் – குமுளி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீசந்திரகுப்த மௌரியா என்ற தனியார் பள்ளிக்

கட்டடத்தில் தேனி அரசு சட்டக் கல்லூரி 29.8.2019 அன்று தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

தேனி அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தர கட்டடம் கட்டும் வகையில், தேனி மாவட்டம், தேனி வட்டம், தப்புக்குண்டு கிராமத்தில், சுமார் 5.66.5 ஹெக்டேர் பரப்பளவில் 89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தேனி அரசு சட்டக் கல்லூரிக் கட்டடம், மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

புதிதாக கட்டப்படவுள்ள தேனி அரசு சட்டக் கல்லூரி, தரை மற்றும் இரு தளங்களுடன், 26 வகுப்பறைகள், சுமார் 400 மாணவர்கள் பங்குபெறும் வகையில் கருத்தரங்கக்கூடம், காணொலிக் காட்சி அறை, சொற்பொழிவு அறை, மாணவ, மாணவிகளுக்கென தனித்தனி ஓய்வு அறைகள், கணினி ஆய்வகம், உள்விளையாட்டரங்கம், மாணாக்கர்கள் சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கேற்ற விதத்தில் சர்வதேச தரத்தில் மாதிரி நீதிமன்ற அரங்கம், நவீன தரத்தில் கல்லூரி அலுவலகம், நிர்வாகத் தொகுதிக் கட்டடங்கள், அதிவேக இணைய வசதிகளுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் அடங்கிய நூலகக் கட்டடங்கள், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கலையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சட்டத்துறைச் செயலாளர் திரு.ச.கோபி ரவிகுமார், சட்டக்கல்வி இயக்குநர் முனைவர் நா.சு. சந்தோஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**